# இலங்கை குற்றச்சாட்டை கையும் நிராகரிப்பு

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

வால் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 28 இதழ்: 274
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-11-1991

PUBLIC LIBRARY JAFFNA

★ மீண்டும் ஒரு நெருக்கடி

# அரசுக்கு எதிராக தலைநகரில்

# பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

அரசுக்கு எதிரான மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று, நேற்று கொழும்பில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டம் அரசுக்கு மீண்டும் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் வேண்டும் என்கோரியே இந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பத்திரிகைத் துறையினர், அரச தரப்பு தொடர்புத் துறையினர் மற்றும் தொழிற் சங்கங்களும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

அரசுக்குச் சொந்தமான நாளேடுகளைத் தனியார்துறையிடம் ஒப்படைக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், உத்தேச பத்திரிகைக் கமிஷன் சிபாரிசையும் இவர்கள் பலத்த கண்டனம் செய்தனர்.

உத்தேச சிபாரிசு மூலம், பத்திரிகைச் சுதந்திரத்தை அரசு கட்டுப்படுத்த முனையும்

(4-ம் பக்கம் பார்க்க)

★ பாதுகாப்பு நிதிக்கு

## ரூபா 220 கோடியை திரட்ட அரசு புதிய வரி

(கொழும்பு)

இலங்கையில் பெருகிவரும் பாதுகாப்பு செலவினங்களை சமாளிக்க இறக்குமதிவரியும் மற்றும்உள்நாட்டில் உற்பத்தி யாகும் பொருட்கள் மீது ஒரு சதவீத பாதுகாப்பு நிதி

(4ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நடாத்தக் கோரி மாணவர் ஆர்ப்பாட்ட பேரணி

(யாழ்ப்பாணம்)

1990-ம் ஆண்டுக்கான க.பொ.த. (சாதாரண) பரீட்சை நடத்தாது பின்போடு வருவதைக் கண்டித்து நேற்றுப் பிற்பகல் நல்லூர் மகாவித்தியாலயத்திலிருந்து

'மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணி' கலந்திணைக்களம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கச்சேரி ஆகியவற்றுக்குச் சென்று மகஜர்களைக் கையளித்தது.

1990-ம் ஆண்டுக்குரிய க.பொ.த. (சா) பரீட்சையை எதிர்வரும் டிசம்பர் முற்பகுதியிலும் 1991ம் ஆண்டுக்குரிய

(4-ம் பக்கம் பார்க்க)

## திருச்சியில் நேற்று சாந்தன் தற்கொலை

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலைதொடர்பாக தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேக நபரான சாந்தன் நேற்றுகாலை சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை திருச்சியில் இவர் தங்கியிருந்த வீட்டைப் பொலிசார் சுற்றிவளைத்தபோதே சாந்தன் சயனைட் அருந்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட வீட்டை பொலிசார் முற்றுகையிட்டபோது சாந்தன் தூக்கிக்கொண்டிருந்த

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கே மீண்டும் கடும் மோதல்

(கொழும்பு)

கிழக்குப் பகுதியில் கடந்த சில தினங்களாக கடும் மோதல் இடம்பெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சு

(4-ம் பக்கம் பார்க்க)

(லண்டன்)

கொழும்பில் நடைபெற விருந்த 6-வது சார்க் மாநாடு ஒத்திப்போடப்படுவதற்கு இந்திய காரணம் என இலங்கை குற்றம் சாட்டி

விருப்பதை மாலைதீவு அதிபரும் 'சார்க்' அமைப்பின் தலைவருமான அப்துல் கையூம் நிராகரித்துள்ளார்.

(இதுதொடர்பாக பி.பி.சிக்கு

4-ம் பக்கம் பார்க்க)

## ஹேரத் பதிலுக்கு இந்தியா அதிர்ச்சி

(புதுடில்லி)

இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. ஹரோல்ட்

ஹேரத் இலங்கை பாராளுமன்றில் தெரிவித்த கருத்

(4-ம் பக்கம் பார்க்க)

## உறவை சீர்படுத்த தொண்டா முயற்சி

(கொழும்பு)

இலங்கை-இந்திய உறவை விருத்தி செய்யும் நோக்கில் அமைச்சர் திரு.எவ் தொண்ட

மான் இந்தியா செல்லுகிறார்.

இரு நாடுகளிடையேயும் சீர்

(4-ம் பக்கம் பார்க்க)

## 27 போராளிகள் தமிழகத்தில் தற்கொலை

(சென்னை)

ராஜீவ் காந்தி படுகொலையைத் தொடர்ந்து பொலிசாரின் தேடுதலையடுத்து இதுவரை 27 ஈழப்போராளிகள் தமிழகத்தில் தற்கொலைசெய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈழப் போராளிகளுக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## பிரேமாவுக்கு எதிராக அனுரா போர்க்கொடி

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி

ஆட்சிமுறையை நீக்கி 'செலக்த மினிஸ்டர்' நாடாளுமன்ற முறையை மீண்டும் உருவாக்க எல்லாக் கட்சிகளும் தங்

ளுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று நாடாளுமன்ற எதிர்க்கட்சி பதில் தலைவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## 3500 வைத்தியர்களுக்கு அரசு கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

தென் இலங்கையில் வேலை நிறுத்தத்தில் தற்போது ஈடுபட்டுவரும் டாக்டர்கள் அனை

வரும் இம்மாதம் 25-ம் திகதிக்கு முன்பு வேலைக்குத் திரும்பவேண்டும். இல்லையேல், யாழ்ப்பாணம்,

(4-ம் பக்கம் பார்க்க)

## தரமான அரிசி வழங்க முயல்வேன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தரம் குறைந்த அரிசி விநியோகிக்கப்படுகிறது. அது பற்றி கொழும்புக்கும் முறைப்பாடு வந்திருக்

கிறது. இனிமேல் அப்படியான தரம் குறைந்த அரிசி வராமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## அவ்ரோ தாக்குதல்

(வவுனியா)

அவ்ரோ விமானம் ஒன்று நேற்றுக்காலை வவுனியா பகுதியிலுள்ள பெரியதம்பனைப் பகுதியில் 7 குண்டுகளை வீசித்தாக்குதல் நடாத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## 3 காவலரண்கள் தாக்கி அழிப்பு

(வவுனியா)

வவுனியா காவல்பிரதேசத்தில் நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் மூன்று இராணுவக் காவ

(4ம் பக்கம் பார்க்க)

# செய்திச்சுருக்கம்

## வெளிக்கள உத்தியோகத்தர்

(பண்டத்தரிப்பு)

யெயர். பூ. எவ். விவசாய அபிவிருத்தி நிலையத்தின்கீழ் கடமையாக நெற்செய்கைக்கென வழங்கப்பட்ட விதை நெல்லாம்ஆகியவற்றைபெற்ற விவசாயிகள் அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறார்களா என்பதை யெயர் ஸ்தானத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் நேரடியாகச்சென்று அவதானித்து வருகின்றார்கள். (72)

## மாதாந்த உதவிப்பணம்

(பொழும்புத்துறை)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் செப்டம்பர் மாதத்திற்கு வழங்கப்பட்டுவருகிறது.

இன்றுவரை செப்டம்பர் மாதத்திற்குரிய பொதுசன உதவிப் பணத்தைப் பெறாதவர்கள் தங்களுக்குரிய பணத்தைச் சகல தபால் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## மாணவர் உணவு முத்திரை

(சித்தங்கேணி)

வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய பொற்தணி பாடசாலைகளின் அதிபர்களை மாணவர்களின்மதியபோசன உணவு முத்திரைகளைத்து பெற்றுக் கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மே, யூன், யூலை, ஆகஸ்ட் ஆகிய நான்கு மாதங்களுக்கான மாணவர்களின் மதிய போசன உணவுமுத்திரைகள் உதவி அரசாங்க அதிபர் மணிமனையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (137)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரதிமாதமும் 2வது புதன்கிழமை நடைபெறும் சைவசித்தாந்த ஆய்வுவட்ட கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதி 23ம் இலக்கத்திலுள்ள திருமறைக்கலாமன்ற மேலோர் கூடத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் திருவாளர் க. சிவபாதசுந்தரம் வரலாற்றுரீதியாக சைவ சித்தாந்தம்' எனும் பொருள் பற்றி ஆய்வுரை வழங்குவார்.

## சைக்கிள் திருட்டு

(பொழும்புத்துறை)

அரியாலை சந்தைக்கு சமீபமாகவுள்ள உறவினர் வீடொன்றுக்கு தனது புத்தம்புதிய ஏபிஸாக்கிளை பூட்டிவைத்து விட்டு மரக்கறி வாங்கச் சென்றபோது சைக்கிள் திருட்டுப்போயுள்ளது.

பொழுதுபுத்துறையைச் சேர்ந்த கோ. சந்திரனின் சைக்கிளே திருடுப்போயுள்ளது.

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி நாகராஜா. நவலவர் கலாவித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார். இவருடைய இடத்திற்கு வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து திருமதி பி. எஸ் கிறீஸ்தராஜா பதவி ஏற்கவுள்ளார்.

கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இருந்த வேலாயுதம் இராஜ கிருஷ்ணன் மகா வித்தியாலயத்திற்கு கே. தனபாலசிங்கமும், திருமதி ஜெயராசா நவலி மகாவித்தியாலயத்திற்கும், வி. தங்கையா கல்வித்திணைக்களத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். (சு)

## மன்னார் கடிதங்கள்

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு மன்னாரிலுள்ள உறவினர்கள் அனுப்பிய கடிதங்கள் கடந்த ஒரு மாதத்திற்கு பின்பு வந்துசேர்ந்தன.

மன்னாரிலிருந்து பொழும்புக்கு அனுப்பப்பட்டு அதிலிருந்து வரும் கப்பலில் கடிதங்கள் வந்ததாகக் கூறப்படுகிறது. (59)

## புனித லூசியா ஆலயம் சேதம்

(ஊர்காவற்றுறை)

கடந்தவருடம் நடைபெற்ற சீனச்சண்டை விபரங்குண்டு விசாரக் 150 வருட பழமை வாய்ந்ததும் ஒல்லாந்தர்காலத்தில் கட்டப்பட்டதுமான மன்னார் பள்ளிமூனை புனித லூசியா ஆலயம் சேதமடைந்துள்ளது. (59)

## வைத்திய அதிகாரி

(புலோலி)

அரவெட்டி அரசினர் கிராமிய வைத்திய சாலையின் பொறுப்பதிகாரியாக உதவி வைத்திய அதிகாரி திருமதி மலர் தங்கவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (61)

## சித்திரப்போட்டி

(யாழ்ப்பாணம்)

சூழல், சுற்றுடல் சம்பந்தமான சித்திரப்போட்டி ஒன்றை வை. எம். கி. ஏ. யாழ்ப்பாணக் கிளை நடாத்தவிருக்கிறது.

விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 20ம் திகதியாகும். போட்டியில் பங்குபற்றுவோர் வை. எம். கி. ஏ. உடன் தொடர்புகொள்ளலாம். (152)

## பொதுசன உதவிப் பணம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வசாவிளான் தபாற்கந்தோரில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர்களான செப்டம்பர் மாத பொடுப்பனவு இன்றுமுதல் உ. அ அதிபர் மணிமனையில் வைத்து வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

(பொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கச் சபாமண்டபத்தில் இம்மாதம் 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ் மேற்கு கொத்தணி அங்கத்தவர் கருத்தரங்கு குருநகர் செல். றோஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் (154)

## மண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டி நாளை 15ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8-30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். போட்டியிடத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்றோர் இப்போட்டிகளில் பங்குபற்றத் தகுதியுடையவராவர். இவர்மகள்கள் க. கனகரட்சா இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசுகளை வழங்குவார். (152)

## சத்துணவின்றி பாதிப்பு

(வட்டுக்கோட்டை)

வலி-மேற்குப் பிரதேச உள்ளூர்ப்பிணித் தாய்மார்கள் பலர் சத்துணவு இன்மையால் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர்.

இன்றைய சூழ்நிலை காரணமாக சத்துணவுப் பொருள்கள் இவர்களுக்குப் போதியளவு கிடைக்காமையாலேயே இவர்கள் இப்படிக் கஷ்டமுற்று வருகின்றனர். (139)

## நிவாரணம் வழங்கப்படவில்லை

(பொழும்புத்துறை)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து பொழும்புத்துறை வசந்தபுரத்திலுள்ள மற்றும் சனசமூக நிலையத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 16 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவில்லை.

யாழ். செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைக் கிளையின் கவனத்துக்கு இவ்விடயம் கொண்டுவரப்பட்டுள்ளது. (152)

## பழைய மாணவர் சங்கம்

(மருதடித்துறை)

தென்புலோலி புற்றளை காரித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டம் விநாயகர் மண்டபத்தில் ஆசிரியர் திரு. எஸ். மோசுவா தலைமையில் நடைபெற்றது. (56)

## ஊசி மருந்து தட்டுபாடு

(புலோலி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக விறைப்பு ஊசி மருந்து இன்மையால் பல சிகிச்சைப்பிரிவு சீரான இயக்கமுடியாதுள்ளது.

இப் பற்றாக்குறைப் பிரச்சினை பிடுங்குவதற்கு தனியார் ஏனைய கிளினிக்குகளில் இடம்பெற்று வருகின்றன.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 9க்குரிய வரலாற்று நூல் எழுதுதல் பற்றிய கலந்துரையாடல் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் நாளை 16ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்குக்கு சமூகக் கல்வி ஆலோசகர்களையும், வரலாற்றுத் துறையில் ஆர்வமுள்ளவர்களையும் கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுக்கொள்கிறார். (71)

## உலர் உணவு விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் கிளைகள் மூலம், வறுமை நிலவரண உணவு முத்திரைக்கு இம்மாதம் 3-ம் திகதி முதல் உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றது.

இதேவேளை இங்குள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மாவலைய எல்லைகளின் நன்மை கருதி காலை முதல் விடுமுறை நாட்கள் உட்பட இரவு நேரத்திலும் திறந்திருப்பதை கவனமுடிகிறது. (71)

## தையல் பயிற்சி நிலையம்

(மானிப்பாய்)

வைரவி தெற்கில் தையல் பயிற்சி நிலையமொன்று கடந்த 4-ந் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தொழில் உத்தியோகத்தர் திரு. க. தர்மராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக உதவி ஆணையாளர் திரு. க. சிவப்பிரகாசம் கலந்து கொண்டார். (71)

## குழந்தைகளுக்கு ஒரு கிலோ சீனியும் ஒரு பக்கெட் பால்மாவும்

(வட்டுக்கோட்டை)

சமூகநல உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 5 வறுமைக் குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு கிலோ சீனியும் ஒரு பக்கெட்பால்மாவுமட்டுப்படுத்தி விநியோக வழங்க உதவி அரசாங்க அதிபர் த. வைத்திலிங்கம் தமது பிரிவு மாதோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இவற்றை பெற்றுக்கொள்ள விரும்புவோர் தத்தமது கிராம சேவை அலுவலர்களின் சிபார்சினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (139)

## அத்தியாவசிய பொருட்கள் விபரம் கையளிப்பு

(காங்கேசன்துறை)

வலி வடக்கில் தரமிடக் உள்ளதத்தியாவசியப்பொருட்களின் விபரத்தை தனியார் வர்த்தகர்கள் வலி. வடக்கு உதவி அதிபரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

வலி வடக்கு உதவி அரச அதிபர் பிரிவு பாலவேலாயுதம் மாதுளாப்புக்குழுவின் வேண்டுகோளையடுத்து இந்த விபரங்களை தனியார் வர்த்தகர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

இதனையடுத்து அத்தியாவசிய சேவைகளுக்காக மேற்படி பொருட்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாலவேலாயுதம் மாதுளாப்புக்குழு தெரிவித்துள்ளது.

## அதிபர்களுக்கு வேண்டுகோள்

(வட்டுக்கோட்டை)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி வளர்சார் விளையாட்டுத் துறைச் செயலாளர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல பாடசாலைகளினதும் பாடசாலைக்கிடைப்படங்களைத் தமக்கு வெகு விரைவில் அனுப்பிவைக்குமாறு அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாளை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் ஒவ்வொரு பாடசாலைகளினதும் கிடைப்படங்கள் அனுப்பப்பட வேண்டுமென்றும் இவற்றை அனுப்பாத பட்சத்தில் தங்கள் பாடசாலையின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாததான காரணத்தைத் தாங்களே பொறுப்பேற்க வேண்டுமெனவும் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் அவர் மேலுக்கெரிவித்துள்ளார். (139)

## மண்வெட்டி விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல்லி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு வெயர் நிறுவனம் வெயர் பூ. எவ். விவசாய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 875 மண்வெட்டிகளை கடந்த வாரம் இலவசமாக வழங்கியுள்ளது.

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்ட இந்த மண்வெட்டிகளில் 240 மண்வெட்டிகள் யாழ்ப்பாணக் மண்வெட்டிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (72)


## தொழிற்பயிற்சிகள்

★ Coumputer Programming in Basic Language
(30 மணித்தியாலம் செய்முறைப்பயிற்சி அளிக்கப்படும்)
★ Diploma in English
★ Hotel Management
★ N. C. E
★ Toefl
★ Spoken English
★ Basic English

ஆசிரியர்: திரு. SAM

★ ரேடியோ, T. V., வீடியோ டெக் திருத்தல்
★ றீவைண்டிங்
★ எலெற்றிகல் வயறிங்
★ Engineering Drawing

1 ஆம் வருட பொறியியல்பீட மாணவர்களுக்காக விசேடமாக பயிற்சி அளிக்கப்படும்.

★ Diploma in Draughtsmanship
★ Air Condition and Refrigeration - Engineering

சகல தொழிற்பயிற்சிகளுக்கும் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்:
16-11-1991

விபரங்களுக்கு:
Jaffna Technical institute
இல. 4. பிள்ளையார் லேன்,
(நாவலர்பெட்டி சந்திக்கு அருகாமை)
திருநெல்வேலி.

ஸ்ரான்லி வீதி
(ரெயில்வே கடவை அருகாமை)
யாழ்ப்பாணம்

(எ 1710)

## வடக்கு கிழக்கிலுள்ள மலையக
# பல்கலைக்கழக மாணவர் விபரம் சேகரிக்கப்படுகிறது!

(தொழும்பு)

வடக்கு-கிழக்கு பல்கலைக்கழகங்களில் தற்போது பயிலும் மலையக மாணவர்களின் விபரம் சேகரிக்கப்படுகிறது.

தற்போது வடக்கு-கிழக்கு பல்கலைக்கழகங்களில் பயிற்று கொண்டிருக்கும் அல்லது தெரிவு செய்யப்பட்டிருக்கும் மலையகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்கள் தங்களது முழுப்பெயர், முகவரி, பிறப்பிடம், சுட்டிலக்கம், பெற்றோரின் பெயர், தற்போது பயிலும் பல்கலைக்கழகம், கற்கும் பாடநெறி ஆகிய விபரங்களை அனுப்பி வைக்குமாறு சப்பிரகமுவ மாகாண சபை உறுப்பினர் திரு. ஏ. எம். ராஜா கோரியுள்ளார்.

அமைச்சர் திரு. தொண்டமானோடும் தொடர்புகொண்டு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மேற்கண்ட தகவல்கள் அவசியம் தேவைப்படுவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லங்கா சிமெந்து நிறுவன
# தொழிலாளர் சம்பள நிலுவைகள் வழங்கப்படும்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளர்களின் கடந்தகால சம்பள நிலுவைகளை வழங்கவும், இனிமேல் அவர்களுக்கு முழுச்சம்பளம் வழங்கவும் தொழிலாளர் ஆணையாளர் ஆவன செய்வதாக தெரிவித்தார்.

லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளர் பொதுத்தொழிலாளர் சங்கப்பிரதிநிதிகள் திரு. வி. இராதா கிருஷ்ணன், திரு. கே. கணேசலிங்கம் ஆகியோர் நாய்ச்சிமா பிரதிநிதிகளுடன் இணைந்து 3 நாள்கள் தொழிலாளர் ஆணையாளரைச் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளர்கள் அநேகமானோர் ஆகக்கூடிய அளவு முகாம்களில் பெரும் கஷ்ட முறுவதாகவும், எவ்வித வருமானமுமின்றி பெரும் கஷ்ட நிலையில் வாழ்வதாகவும் எடுத்துக் கூறப்பட்டதையடுத்து அவர்களது சம்பள நிலுவைகளையும், முழுச் சம்பளத்தையும் வழங்க விரைவில் ஆவன செய்வதாக தொழிலாளர் ஆணையாளர் உறுதியளித்துள்ளார்.

இதற்கிடையில் லங்கா சிமெந்து நிறுவனத்தலைவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அரச அதிபர்களுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குமாறு கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (86)

## வலிவடக்கில்
# 15 பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள்

(காங்கேசன்துறை)

வலி வடக்கில் தற்போது இயங்கும் 15 கிராமசேவகர் பிரிவுகளில் பாவனையாளர் பாதுகாப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்துள்ளன.

வலி வடக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைகாரணமாக கிராம சேவகர் பிரிவுகள் இயங்காமுடியாமல் விதம்பிற்கு தற்காலிக மாக வேறிடங்களில் வைத்து கிராமசேவை அலுவலர்கள் தமது கடமையை செய்து வருகிறார்கள்.

15 கிராமசேவகர் பிரிவுகள் மட்டும் தொடர்ந்து இயங்கி வருகின்றன. இவற்றுக்கான பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவை தமது கடமையை ஆரம்பித்துள்ளன. (86)

## வலிவடக்கில்
# மாதாந்த உதவிப் பணம் வழங்கப்படுகிறது

(காங்கேசன்துறை)

வலி. வடக்குப் பகுதியைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கு செப்டம்பர்மாதத்துக்கான உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்தும், ஏனையோருக்கு அவர்களது பிரதேச அலுவலர் அலுவலகத்தில் வைத்தும் இந்த உதவிப்பணம் வழங்கப்படுகிறது.

இந்த உதவிப் பணத்தைப் பெறவோர் உடனடியாக அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சந்திரராஜா கோரியுள்ளார். (86)

## வவுனியா அரசஊழியருக்கு
# கடமைக்கு திரும்ப மணிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் சகல அரச ஊழியர்களும் இம் மாதம் 18ம் திகதிக்குமுன் கடமைக்கு திரும்பவேண்டும் என்றும் அவ்வாறு செல்ல தவறுவோர் தாமாகவே வேலையிலிருந்து நீங்கியவராகக் கருதப்படுவர் எனவும் அரச அறிவித்துள்ளது.

வவுனியாப் பகுதியில் பெருமளவு அரச ஊழியர்கள் கடமைக்குத் திரும்பாததை யடுத்தே அரச மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

# எட்டு மாகாண சபைகளுக்கு
## இணைப்பு அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள எட்டு மாகாண சபைகளுக்கும் இணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாகாண சபைகளுக்குமிடையிலும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் கீழ் இணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் கட்டுப்பாட்டுச் சேவைப் பணியாளர் திருமதி அ. சோமா குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

## வரவுசெலவுத்திட்ட
# விவாதம் 26 நாட்கள் நடக்கும்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்ட விவாதம் நாடாளுமன்றில் 26 நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முதல் ஆரம்பமாகி டிசம்பர் 19-ம் திகதி வரை விடுமுறை தவிர்ந்த நாட்களில் கூடி வரவு செலவுத் திட்ட விவாதத்தை நடத்தும்.

இம்மாதம் 22ம் திகதி இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இடம்பெறும்.

## உணவு முத்திரை

(மானிப்பாய்)

6-வது தொடக்கத்தில் புதிய வறுமை நிவாரண உணவு முத்திரைகள் கோப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், மருதித்துறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு கடந்த 4-ந் திகதி யாழ். செயலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மே, யூன், யூலை மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் சகல உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் இங்கிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். சமூக சேவைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (71)

## பாவனையாளர் பாதுகாப்புக்குழுக் கூட்டம்

(மருதித்துறை)

மருதித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம சேவை அலுவலர் பகுதிகளின் கிராமிய பாவனையாளர் பாதுகாப்புக்குழுக்களுக்கான கூட்டமொன்று மருதித்துறை வடஇந்து மகளிர்கல்லூரியில்மருதித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. செல்வ ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திலே விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. வே. பாலகுமார் கருத்துரையை வழங்கினார்.

இக் கூட்டத்தில் மருதித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் 35 கிராமசேவை அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்தமைார் 250 பாவனையாளர்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (52)

## மூன்றாண்டு கல்வி அபிவிருத்தி திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட மூன்றாண்டுக் கல்வி அபிவிருத்தித் திட்டம் 1992, 1993, 1994 ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்குப் பொருத்தமான திட்டம் வரையும் பணி தீர்க்கப்படுத்தப்படுகின்றது.

கடந்தவாரம் இதன் பொருட்டு கோட்ட மட்ட ஆணையினருக்கு ஐந்துநாள் பயிற்சிச் செயலமர்வு நடைபெற்றது. இப்பயிற்றுநர் இனி அடுத்த மட்டமாகத் தத்தமது கோட்டங்களிலுள்ள எல்லாப் பாடசாலை அதிபர்களுக்கும் ஒவ்வொரு தெரிந்தெடுத்த ஆசிரியர்களுக்கும், சேவைக்கால ஆலோசகர்களுக்கும் இப்பயிற்சியை அடுத்தவாரத்திற்குள்பூர்த்தி செய்வார்கள். இதற்கான ஏற்பாடுகளை கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக்கல்வி பணிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

விசேட பாடங்களுக்குப் பொறுப்பான உதவிக்கல்வி பணிப்பாளர்கள் இப்பயிற்சி களிலேயே தங்களிப்புச் செய்வர். இவ்வாண்டிறுதிக்குள் சகல பாடசாலைகள், பொதுவகங்கள், கோட்டங்கள் மட்டத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்தினைக்கான மட்டத்திலும் மூன்றாண்டுக்கான அபிவிருத்தித்திட்டம் உருவாக்கப்பட்டு அடுத்த ஆண்டில் அமுல்படுத்தப்படவுள்ளது. (158)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை, சித்தன்கேணிப் பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இங்குள்ள நாய்கள் கோழிகளை வாடகைக்கு, பொதுமக்களை அச்சுறுத்துகின்றன. (139)

## இடம்பெயர்ந்த பகுதியிலிருந்து விண்ணப்பிக்கலாம்

(காங்கேசன்துறை)

வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமக்கு தேவையான அத்தியவசியப் பொருட்களுக்காக தாம் இடம்பெயர்ந்துள்ள இடங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கான பால்மா மற்றும் விசேட வைபவங்களுக்கான அத்தியவசியப் பொருட்களைப் பெற விரும்பும் இடம்பெயர்ந்த மக்கள் தாம் தற்போது வசிக்கும் பிரிவு கிராமசேவை அலுவலரின் சிபார்சுடன் அப் பகுதி உதவி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்து இவற்றைப் பெறலாம் என பாவனையாளர் பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது. (86)


# இராசி பலன்

14-11-1991
வியாழக்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 28)
ஆட்டமி காலை 5-58வரை.

திருவோணம் மு. ப. 8-36 வரை, இரவு 1-37 முதல் 8-07 வரை சுபநேரம் 7-37 முதல் 9-07 வரை, மரணயோகம்.

மேடம்: லக்ஷ்மி கடாக்ஷம், பதவிப் பெருமை, புத்திரர் மேன்மை.

இடபம்: குடும்ப விரோதம், மனமுறிவு, தடைகள், கஷ்டம்.

மிதுனம்: அந்தணர் நேசம், அவமானம், காரிய தடை.

கடகம்: கலியாண முயற்சி, தனலாபம், குடும்பசுகம்.

சிங்கம்: மகான் அருளாசி, நண்பர் சந்திப்பு, தொழிலாபம்.

கன்னி: மனச்சஞ்சலம், பதற்றபுத்தி, அலைச்சல்.

துலாம்: கைப் பொருள் நஷ்டம், குடும்பப் பிரிவு, யோசனை.

விருச்சிகம்: பிணி அகலும், வியாபார விருத்தி, லாபம்.

தனுசு: இருப்பிடமாற்றம், தனிமதிருத்தல், பணமிடுதி.

மகரம்: சத்துருலாபம், கீர்த்தி, மனத்தைரியம்.

கும்பம்: வாழ்க்கைச்சுகம், அதிகாரிகள் தொடர்பு, ஆரவாரபோஜனம்.

மீனம்: நினைத்தது கைகூடும், ஜனநேசம், அறிவுரை.

ஜோஸ்யர்


## முதலிடம்

(மருத்தித்துறை)

சர்வதேசஆசிரியர் தினத்தை யொட்டி யாழ். மாவட்டக் கல்விக்கோட்டப்பகுதிகளில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியிலும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியிலும் வடமராட்சி கோட்டக் கல்விப் பகுதி முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டது. (52)

## நாவலர் குருபூசை

(வண்டத்தறிப்பு)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வாயிலில் அமைந்திருக்கின்ற சிலையாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை இம் மாதம் 18ம்திகதியன்று கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சைவ விளக்கு விருது மன்னன் எழுத்துப்போட்டி ஒன்றும் இக் குருபூசையை முன்னிட்டு நாளை 15ம் திகதி வெள்ளி கிழமையன்று மாணவர்களிடையே நடாத்தப்படவுள்ளது. (72)

★ மாதம் ஒருமுறையாவது

# இலவச நிவாரணம் வழங்க அரசதரப்பை கோருவேன்

— தேவநேசன் நேசையா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மக்களுக்கு, மாதத்தில் ஒரு முறையாவது இலவசமாக உலர் உணவு வழங்குமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகத்தைக் கோர உள்ளேன்.

இவ்வாறு அத்தியாவசியச் சேவைகள் மேலதிக ஆணையாளர் திரு தேவநேசன் நேசையா யாழ். மாவட்டப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலில், மூலப் பொருள் இறக்குமதி, மின்சாரம் இல்லை, இராணுவத் தடை போன்ற காரணங்களால் வருமானம் இழந்த நிலையில் இருக்கும் யாழ். மாவட்ட மக்களுக்கு இலவச நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கக் என்ற யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது; கடுபிடிகளைக் அனுப்புவதற்குப் பணம் பிரச்னையாக உள்ளது. இதற்கு ஒழுங்கு செய்தால், கப்பலில் பிடியை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்றார். (சு

## சுவர்க்காரம், சலவைப்பவுடர் விரைவில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு கப்பலில் கொண்டுவரப்பட்ட சவர்க்காரமும், சலவைப் பவுடரும் கீழ்வரும் அட்டவணைப்படி ப. நோ. கூ. சங்கங்களில் விரைவில் வழங்கப்படவுள்ளது;

ஒருவர், அல்லது இருவரைக் கொண்ட குடும்பத்துக்கு 275 கிராம் சலவைப் பவுடர் 35 ரூபா.

மூவர் கொண்ட குடும்பத்துக்கு 1 சோப் (130 கிராம்) 15 ரூபா. 50 கிராம் சலவைப் பவுடர் 8 ரூபா.

நால்வர் கொண்ட குடும்பத்துக்கு, 275 கிராம் சலவைப் பவுடர் 35 ரூபா, 50 கிராம் சலவைப்பவுடர் 8 ரூபா.

ஐவர் கொண்ட குடும்பத்துக்கு 1 சோப் (130 கி. 550 கிராம் சலவைப்பவுடர் 70 ரூபா. (வி)

## பவளவிழா

(யாழ்ப்பாணம்)

உருப்பராய் வைரத்தமிழ் வித்தியாலயம் ஸ்தாபிக்கப் பெற்று எழுபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தி நிறைந்ததான பவளவிழா இடம் பெறவுள்ளது.

குறித்த வித்தியாசாலையின் பணிகளை நினைவு கருவுவகையில் பவளவிழா மலரும் வெளிவரவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாடசாலை அபிவிருத்திச் சங்கம் எடுத்துவருகிறது. (153)

## திருக்கல்யாண உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஆறுமுகம் சந்நிதி சுவாமி தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு, திருக்கல்யாண உற்சவமும், 4-30 மணிக்கு 'வள்ளி திருமணம்' என்னும் பொருள்பற்றி திரு. க. நாகேஸ்வரன் சிறப்புரை நிகழ்த்துவார். வள்ளி தேவசேனாதிபதியாக குறமகளைப்பெருமான் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். மறுநாள் ஐப்பசிக் கடைசி வெள்ளி உற்சவமும் இடம்பெறும்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

கலிவரமம் மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த ஆனைந்து கொத்தணி கிராமிய தொண்டர்களுக்கும் ஏனையமாணவ இயக்க உறுப்பினர்களுக்குமான ஒன்றுகூடல் நிகழ்ச்சி இன்று மாலை 4 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக வலிகாமம் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் க. சத்யா தெரிவித்துள்ளார்.

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய பேட்டியில் மோதல் நேர்ந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் மேலும் தெரிவிக்கையில் 'சார்க்' ஒத்திப் போடப்படுவதற்கு இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் காரணமல்ல என்றார். மேலும் பூடான் மன்னர் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளாததாலேயே மாநாடு ஒத்திப்போடப்பட்டது எனவும் டிசம்பர் நடுப்பகுதியில் சார்க் மாநாடு கொழும்பில் மீண்டும் நடைபெறும் என தாம் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். (ச)

## கிழக்கே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்புக் காட்டுப் பகுதியில் இம்மோதல் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (சி)

## தரமான அரிசி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். செயலகத்தில் நடைபெற்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது; இதற்கு முன் மூன்றிலொரு பங்கு உணவுப் பொருள் கப்பல் மூலமும், மூன்றிலொரு பங்கு தனியார் மூலமும், மிகுதி மூன்றிலொரு பங்கு உணவுப் பொருள் யாழ். மாவட்டத்தில் உணவு உற்பத்தி மூலமும், நிறைவேற்றப்பட்டு வந்தது.

தொடர்ந்து கடுதலான உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு தரைவழி மார்க்கமாகவும், காங்கேசன்துறை, துறைமுக மூலமும், மருதநித்துறை துறைமுகத்தை விரிவாக்கவும் நடவடிக்கை எடுக்க முனைந்தோம். மருதநித்துறை துறைமுகத்தை விரிவாக்க இராணுவம் விருப்பவில்லை. அதனால் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு கப்பலில் இருந்த பொருட்களை வரவாக இறக்குவதற்கு கடுதலாக 'பாஜ்' பாவிப்பதினூடாக கடுதலான உணவு யாழ் மாவட்டத்துக்கு அனுப்ப முடியும். அதற்கான ஒழுங்குகளை செய்யுமாறு கோரவுள்ளேன்.

"ஹைலண்ட்" பாலமாக திறமாக அடைக்கப்பட்டு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு கோரவுள்ளேன். அது சாத்தியப்படாத போனால், வேறாக பாலமா அனுப்பவைக்குமாறு கேட்கவுள்ளேன்.

குழந்தைகள் பால்மா, மருந்து வகைகள், பாடசாலைப் பிள்ளைகளுக்கான உபகரணங்கள், ப. நோ. கூ. சங்கங்களுக்குத் தேவையான கடதாசி வகைகள் போன்றவற்றின் புள்ளி விபரங்களை அரசாங்க அதிபர் மூலம், அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு அனுப்பிவைத்தால், அதுபற்றி ஏதாவது செய்யக்கூடியதாக இருந்தால், செய்து அனுப்பி வைக்கப்படும்'' என்றார். (சு)

## மாவீரர் நாள்-1991

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்

★ மாவீரர் கொடி வாரம் 15-11-91 முதல் 27-11-91 வரை ★

## பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்கப்படும் என நிதியமைச்சின் வரவு - செலவுத் திட்ட ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து வசூலிக்கப்பட இருப்பதாகவும் இதன்மூலம் 820 கோடி ரூபா நிதியைத் திரட்ட முடியுமெனவும் அரசு எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

## கிரிக்கெட் போட்டி

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையிலான 3-வதும் இறுதியுமான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று புதுடில்லியில் நடைபெறும்.

## 3500 வைத்தியர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாலி பக்கலைக்கழகங்களிலிருந்து வைத்தியப் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் மாணவர்கள் அவர்களின் இடங்களுக்கு நியமிக்கப்படுவார்கள், என்று அரசு நேற்று அறிவித்துள்ளது.

இவ்வாறாக 6-ம் திகதி முதல் 3,500க்கும் மேற்பட்ட உதவி டாக்டர்களும் பதிவு செய்யப்பட்ட டாக்டர்களும் வேலை நிறுத்தம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (வி)

## மீண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கருதியே, பத்திரிகையாளர்கள் இந்த மசோதாவை எதிர்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ)

## உறவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குலைத்துள்ள உறவுகளை மேம்படுத்த திரு. தொண்டமான் இந்த விஜயத்தின்போது முயல்வாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்தியர்கள் இலங்கைக்கு கட்டுப்பாடின்றி வந்துபோக தாராளமொன்றை மேற்கொள்ள இந்தியா முற்படுத்தல், இரு நாடுகளுக்கும் பயணம் செய்ய இளைஞர்கட்கு சலுகைக்கட்டணம் வழங்கல், டில்லி-கொழும்பு, கொழும்பு-மதுரை நேரடி விமானசேவையை ஆரம்பித்தல், இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்குமிடையேமீண்டும் கப்பல் சேவையை உடன் ஆரம்பித்தல் போன்ற விடயங்கள் குறித்தும், திரு தொண்டமான் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

## திருச்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாராவும் பொலிசார் 5 குடவைகள் குப்பாக்கிப் பிரயோகம் செய்தாலும் இதன் போது சாந்தனுக்கு தோள் பட்டையில் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ராஜீவ் காந்தி கொலை ஏறித்த குற்றப்பத்திரிகை மத்திய புலனாய்வுக்குழுவினால் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என மத்திய புலனாய்வுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (வ)

## ஹேரத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹுக்கு இந்திய அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

'சார்க்' ரத்தானதற்கு இந்தியப் பிரதமரே காரணம் என்ற விமர்சனம் நிகழ். ஹேரத் நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இதனை வன்மையாக மறுத்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சகம் இதற்கு அதிர்ச்சி தெரிவித்ததுடன் பலத்த கண்டனமும் தெரிவித்துள்ளது.

## பிரேமாவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுரா மண்டாரநாயக்கா நேற்றுத் தெரிவித்தார்;

தனிமனிதனுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கும் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும். ஜனாதிபதி ஆட்சி முறையினால் நாட்டின் நிர்வாகம் பெருமளவில் சீர்குலைந்துள்ளதென்று ஆதங்கமாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள சகல அரசியல்வாதிகளும், அமைப்புகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடத்தவிருக்கும் இயக்கத்தில் ஒன்று சேர்ந்து பங்கு பற்ற வேண்டுமென்றார் (மா)

## பரீட்சை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க. பொ. த. (சா/த) பரீட்சையை குடும்பர் பிரதேசத்திலும் நடாத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1990ம் ஆண்டுக்குரிய இப்பரீட்சையை நடாத்த சகல தரப்பினரும் ஆவன செய்ய வேண்டுமென்றும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சு-71)

## 3 காவல் அரண்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரண்கள் முற்றாக அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில், பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நவீன ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று அதிகாலை மேனிலவில் பட்டினிச்சூரி புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள மூன்று இராணுவக் காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் அரசாங்கப் படையினர் முற்றாக அழிக்கப்பட்டதுடன் பல இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலின்போது, விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு:

ஆர்பிஜெஸ் எக். எம். ஜி.-01, அதற்குரிய ரவுசிகள்-02, மேலதிக சுடுகணை-01, 5 56 ரகரவைகள்-485, 7.62 ரக ரவைகள்-2524, ஜே ஆர். ரக வைக்குண்டு 01, தனிக் கவசங்கள்-02, ஆகிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. (வ)

## பவளவிழா

(யாழ்ப்பாணம்)

உருப்பராய் வைரத்தமிழ் வித்தியாலயம் ஸ்தாபிக்கப் பெற்று எழுபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தி நிறைந்ததான பவளவிழா இடம் பெறவுள்ளது.

குறித்த வித்தியாசாலையின் பணிகளை நினைவு கருவுவகையில் பவளவிழா மலரும் வெளிவரவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாடசாலை அபிவிருத்திச் சங்கம் எடுத்துவருகிறது. (153)

## திருக்கல்யாண உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஆறுமுகம் சந்நிதி சுவாமி தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு, திருக்கல்யாண உற்சவமும், 4-30 மணிக்கு 'வள்ளி திருமணம்' என்னும் பொருள்பற்றி திரு. க. நாகேஸ்வரன் சிறப்புரை நிகழ்த்துவார். வள்ளி தேவசேனாதிபதியாக குறமகளைப்பெருமான் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். மறுநாள் ஐப்பசிக் கடைசி வெள்ளி உற்சவமும் இடம்பெறும்.


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

### நிறைவேற்றுத் திட்டமிடல் அதிகாரி

எமது பணிமனையில் திட்டங்களை திறம்பட நடைமுறைப்படுத்தக் கடிதவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வி, தகுதி, ஆற்றல் அனுபவம், திட்டங்களை நிறைவேற்றும் தன்மை, நிர்வாகத் திறமை, வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளும் தகைமை, சேவை செய்யும் ஆற்றல்உள்ளோர் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடைசித் திகதி 20-11-1991. நேர்முகப் பரீட்சை 21-11-1991 முற்பகல் 9-00 மணிக்கு நடைபெறும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

க. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
12-11-1991. (ஏ 1713)


இவ்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கூட்டுறவுத் தொழிலாளர் யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number 3/10336/91.